வந்தவாசி

2379/19
2615
18/9/19

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள

முன்னிலை: திருமதி.சு.குமாரி, பி.காம்.,

ந.க.12088/2015/பஅ3

நாள்.05.08.2019

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை திருவண்ணாமலை மாவட்டம் – திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு ஊராட்சிகளில் ஊராட்சி செயலர்களாகப் பணிபுரிந்து 2013–14–ம் ஆண்டு 20 சதவிகித காலிப்பணியிட இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1..அரசு கடிதம் (2ப) எண்.48, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7) துறை நாள்.17.07.2017.
2.செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.2720/சிடி–பி2/2018, நாள்:05.07.2018.
3.திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளரின்(வளர்ச்சி) செயல்முறைகள் ந.க.எண்.12088/2015/பஅ3 நாள்:24.09.2018.
4.தொடர்புடைய ஆவணங்கள்

ஊராட்சி ஒன்றியம், வந்தவாசி
18 SEP 2019

*****

ஆணை:

திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி செயலர்களுக்கு 2013–14–ம் ஆண்டு 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்கிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1954–ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விதி 16(பி)ன் பிற்பகுதியின் கீழ் இசைவு அளித்ததன் அடிப்படையில் அரசின் முறையான அனுமதிபெற்று இளநிலை உதவியாளர்/ காசாளர்/ ஊர் நல அலுவலர் நிலை–2 ஆக கீழ்கண்ட பணியாளருக்கு பதவி உயர்வு வழங்கி பணிநியமனம் அளித்து உத்திரவிடப்பட்டது. இதன் அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த தேதி விவரம் பின்வருமாறு

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பதவி | தற்போது பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | என்.துரை, காசாளர் | ஊராட்சி ஒன்றியம், வந்தவாசி. | 28.09.2018 பிற்பகல் | 28.09.2018 பிற்பகல் |

மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் கலம் 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியான பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்படி தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இவர்களின் தகுதிகாண் பருவம் துவங்கும் மற்றும் இவர்களின் தகுதிகாண் பருவகாலம் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் ஆகும்.

மேலும், இவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களுக்கான தேர்வுகள் மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)
திருவண்ணாமலை.

பெறுநர்.

திரு.என்.துரை,
காசாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
வந்தவாசி.

– உரிய வழிமுறையாக.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ / கி.ஊ), வந்தவாசி.

நகல்: “ பஅ3” இருப்பு கோப்பிற்கு.

Block Development Officer (B.P
Vandavasi